கலைஞருக்குக் கடிதம்

ஞாநி...

நெஞ்சுக்கு நீதி எங்கே?

அன்புள்ள கலைஞர் அவர்களுக்கு,

வணக்கம்.

முரசொலியில் 17 ஆண்டுகளுக்கு முன்னர் புதையல் இணைப்பின் உதவியாசிரியனாக ஓராண்டு பணியாற்றிய என்னைப் பற்றி கார்ட்டூன் வெளியிட்டு சிறப்பித்திருக்கிறீர்கள். இது வேறு எந்த பத்திரிகையாளனுக்கும் கிட்டாத கௌரவமாகும். நன்றி.

வழக்கம் போல உங்கள் புத்திக் கூர்மை அதில் பளிச்சிடுகிறது. பிற்போக்குக் கருத்துக்களின் ஆதரவாளரான துக்ளக் ஆசிரியர் சோவையும் அத்தகைய கருத்துக்கள் எந்த இடத்திலிருந்து வந்தாலும் எதிர்க்கும் என்னையும் ஓரணியாக்கிக் காட்டியிருக்கிறீர்கள். தமிழ் செம் மொழியாவது குறித்து அவர் வயிறெரிவதாகவும் தயாநிதி மந்திரியானது பற்றி நான் வயிறெரிவதாகவும் சித்திரித்திருக்கிறீர்கள்.

என் கண்ணெதிரே குங்குமம் நிறுவனத்தில் டீன் ஏஜ் வயதில் அப்ரெண்ட்டிசாக நுழைந்து வளர்ந்த இளைஞர்கள் கலாநிதியும் தயாநிதியும் வாழ்க்கையில் முன்னேறுவது குறித்து எனக்கு வயிறெரிய ஏதுமில்லை. உங்கள் குடும்பம், என் குடும்பம் மட்டுமல்ல, எல்லா குடும்பங்களிலும் உள்ள இளைஞர்கள் வாழ்க்கையில் முன்னேற வேண்டும் என்பதுதான் என் விருப்பம். அதை எப்படி சாதிக்கிறார்கள், எந்த வழியில் சாதிக்கிறார்கள் என்பது பற்றிய சமூக அக்கறையும் விமர்சனமும் நீங்கள் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் என் போன்றோரால் செய்யப்படும்.

தயாநிதி மாறனும் அன்புமணியும் அமைச்சர்களாக்கப்பட்ட விதத்தைதான் நாங்கள் கேள்வி கேட்கிறோம். இது ஜனநாயகத்துக்கு விரோதமானது, உட்கட்சி ஜனநாயகம் இல்லாத கட்சிகள்தான் பாசிசத்தின் ஊற்றுக்கண் என்பதே என் விமர்சனம். இதை எதிர்கொள்ள உங்களால் இயலவில்லை. ஏனென்றால் உங்கள் முடிவுகள் நேர்மையற்றவை. எனவே வழக்கம் போல உங்களுடைய நேர்மையின்மையை மறைக்க உங்கள் புத்திசாலித் தனத்தைப் பயன்படுத்துகிறீர்கள்.

தமிழ் செம்மொழியாவதும், தயாநிதி அமைச்சராவதும் உங்கள் கார்ட்டூனில் சமமாக்கிக் காட்டப்படுவதுதான் உங்கள் சாமர்த்தியம். இரண்டும் ஒன்றா ? முன்னது கோடிக்கணக்கான தமிழர்களின் கொண்டாட்டத்துக்குரியது. பின்னது உங்கள் திருக்குவளை குடும்ப வகையறாக்களின் இல்லத் திருவிழாவுக்கான விஷயம்.

என் விமர்சனங்களில் நான் எழுப்பிய அடிப்படைக் கேள்விகளுக்கு இப்போது கூட நீங்கள் பதில் சொல்லலாம்.

1. பிறப்பின் அடிப்படை தவிர தயாநிதியை எம்.பியாக்கி அமைச்சராக்கி நீங்கள் மகிழ வேறு என்ன அரசியல் தகுதி அவருக்கு உண்டு ? ஸ்டாலின் போலப் பதவிகளுக்கு வரும் முன்பு கட்சிப் பணியில் பத்தாண்டுகளாவது உழைத்தாரா?

2. பிறப்பு தவிர வேறு தகுதிகள் உண்டென்றால், அந்தத் தகுதிகள் உடைய வேறு இளைஞரே கட்சியில் இல்லையா ?

3. சிறுபான்மை, தலித் நலனுக்காக உழைப்பவர் என்று ஓயாமல் சொல்லிவருகிறீர்களே, அப்படியானால், ஆயிரம் விளக்கு உசேன், பரிதி இளம் வழுதி போன் றோரை ஏன் மத்திய அமைச்சராக்கிட உங்கள் மனதில் எண்ணமே எழுவதில்லை ?

4. நீங்கள் எத்தனை சமாதானங்கள் சொன்னாலும், தயாநிதி மட்டும் உங்கள் பேரனாக இருந்திராவிட்டால், அவர் தற்போது எம்.பியாகக் கூட ஆகியிருக்கமாட்டார் என்பதுதானே உண்மை ? எனவே பிறப்பின் அடிப்படையிலான அரசியல் செய்யும் நீங்கள் அல்லவா பார்ப்பனீயத்தின் பாதுகாவலர் ?

5. இந்த சுடுகிற உண்மைகளை சுட்டிக்காட்டியதற்காக என்னை ஏகடியம் பேசி நீங்கள் கார்ட்டூன் வெளியிட்ட அதே முரசொலி இதழில் உடன்பிறப்புக்களுக்கு நீங்கள் எழுதிய கடிதத்தில் 'அரசியல் புரட்சியுடன் அறிவுப்புரட்சியும் தொடர" பெரியார் வழியில் பகுத்தறிவைப் பரப்ப வேண்டுமென்று, எம்.பி, மந்திரி பதவிகள் எந்த நாளிலும் கிடைக்கும் வாய்ப்பற்ற லட்சோப லட்சம் கழகக் கண்மணிகளுக்கு அறைகூவல் விடுத்திருக்கிறீர்களே ? இந்தப்பகுத்தறிவுப் புரட்சியிலிருந்து தயாநிதி, ஸ்டாலின்களுக்கு மட்டும் விதி விலக்கு ஏன் ? பத்திரிகைப் புகைப்படங்களிலே அம்மன் கோவிலில் ஏற்றிய சூடத்தைக் கண்ணில் ஒற்றி தயாநிதியும் ஸ்டாலினும் வழிபடுவதைக் கண்ட பகுத்தறிவாளர்கள் கேட்கிறோம் - ஏன் நீங்கள் இதே உபதேசத்தை அவர்களுக்குச் செய்வதில்லை ? விளையும் பயிர் முளையிலே தெரியும் என்று தயாநிதியின் திறமைகளை வீட்டுக்குள் கண்டறிந்த நீங்கள், மூட நம்பிக்கைச் சேற்றிலே அந்த செந்தாமரை உழல்வதைக் கண்டு ஏன் மனம் பதைக்கவில்லை ?

இந்தக் கேள்விகளுக்கெல்லாம் நேர்மையான பதில் உங்களிடமிருந்து கிட்டும் என்ற நம்பிக்கை தற்போது எனக்கில்லை.ஐம்பதில் வளையாததா எண்பதில் வளையப் போகிறது ? நியாயமான விமர்சனங்கள் வைக்கப்படும் போதெல்லாம் அந்த எழுத்தாளர்களை, பத்திரிகையாளர்களை அவதூறு செய்வதும் அச்சுறுத்துவதும் கேலி பேசுவதும் உங்களுடைய பழைய உத்தி. எழுத்தாளர் ஜெயமோகனின் விமர்சனத்துக்கு பதிலாக யானையின் காலில் நசுங்கிவிடுவாய் என்று மிரட்டல் கவிதை எழுதினீர்கள். இந்தியன் எக்ஸ்பிரஸ் டி.என்.கோபாலனின் விமர்சனத்துக்கு பதிலாக முரசொலி ஆண்டி போண்டியில் கோபாலன் ஜெயலலிதாவிடம் சூட்கேஸ் வாங்கிவிட்டதாக அவதூறு செய்தீர்கள். இப்போது எனக்கு வயிற்றெரிச்சல் என்று கேலிச்சித்திரம் வெளியிடுகிறீர்கள்.

பி.ஜே.பியுடன் உறவு கொண்டு பரதேசிப் பண்டாரக் கட்சியை நீங்கள் வளர்க்கத்தொடங்கிய காலம் முதல் நிஜமாகவே வயிறெரியும் எனக்கு , தி.மு.கழகம் திருக்குவளை பாதையிலிருந்து ஈரோட்டுப் பாதைக்குத் திரும்ப வாய்ப்பே இனி இல்லையோ என்று வருத்தம் கொண்ட எனக்கு- ஆறுதலாக அமைந்தது என்ன தெரியுமா?

முரசொலி, அண்ணா அறிவாலய வளாகங்களிலிருந்தும், தமிழ்நாட்டின் பல மூலைகளிலிருந்தும் உங்களுடைய பல உடன்பிறப்புகள் என் விமர்சனத்தைப் பாராட்டியல்ல, நன்றி தெரிவித்து நேரிலும் தொலைபேசியிலும் சொன்ன வார்த்தைகள்தான். " நாங்கள் சொல்ல முடியாமல் இருக்கிறோம். எங்களுக்காக நீங்கள் எழுதிவிட்டீர்கள். நன்றி" என்ற அந்த வார்த்தைகள் கழகத்துக்குள்ளேயே இருந்து கொண்டிருக்கும் உள்ளக் குமுறல்களை உங்களுக்கு இனியெனும் உணர்த்தினால் சரி.

உங்களுடைய அறிவுக் கூர்மையை, எழுத்தாற்றலை, பேச்சாற்றலை மதித்தவர்கள், அவற்றிலே மயங்கியவர்கள் கூட இப்போது அவையெல்லாம் உங்களுடைய தனிப்பட்ட நலன்களுக்கான அரசியலை மூடி மறைக்கும் கவசமாகவே பயன்பட்டுவருவதை உணர்ந்து வருகிறார்கள். இந்த விழிப்புணர்வையும் மீறி உங்களுக்கு அளிக்கப்படும் மரியாதையெல்லாம், உங்கள் நேர்மைக்காக அல்ல, உங்கள் முதுமைக்காக மட்டுமே என்று தயவு செய்து உணருங்கள்.

அன்புள்ள

ஞாநி



மனிதன் பதில்கள்

சேலம் குட்டி சாமியார் மூலம் தமிழ் நாட்டில் ஒரு ஆன்மிகப் புரட்சி ஏற்படுமா ?

வா.கிருஷ்ண மூர்த்தி மேற்கு மாம்பலம்

13 வயது சிறுவனை சாமியார்த்தனம் நோக்கித் தள்ளி அவனை ஆன்மிகக் குழந்தைத் தொழிலாளி ஆக்கியதற்காக அவனுடைய பெற்றோரில் தொடங்கி தற்போது ஆதரவு காட்டும் அனைவர் மீதும் குழந்தைத் தொழிலாளர் தடுப்பு சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்க வேண்டும். 13 வயதில் ஆன்மிகப் பக்குவம் வந்துவிட்டது என்று ஒரு அரை டிராயர் பையன் சொன்னால் ஏற்கிற முட்டாள்கள், அவன் தனக்கு குடும்பத் தலைவனாகும் பக்குவம் வந்துவிட்டது உடனே திருமணம் செய்வித்து சாந்தி முகூர்த்தம் நடத்தச் சொன்னால் செய்வார்களா ?

குட்டிச் சாமியாரின் ஆன்மிக சொற்பொழிவால் கவரப்பட்டு தொழிலதிபர்கள், வக்கீல்கள், டாக்டர்கள் என்று பக்தர்கள் அதிகரிக்கிறார்களாம். ஒரு 13 வயது சிறுவன் எப்படிப்பட்ட ஆன்மிகவாதியாக இருக்க முடியும் ? வேத நூல்கள், பக்தி புராணங்கள் எல்லாவற்றையும் படித்து விட்டு திரும்பச் சொல்வது ஆன்மிகமாகுமா ? அப்படியானால் 1330 திருக்குறளையும் கரதலப்பாடமாகப் படித்துவிட்டு அடி முதல் நுனி வரை எந்த வரிசையில் கேட்டாலும் சொல்லும் ஆற்றல் உடைய பத்துப் பனிரெண்டு சிறுவர் சிறுமியர் தமிழ் நாட்டில் உண்டே. அவர்களுக்கு பக்தர்களாக தொழிலதிபர்கள் வந்து குவியாததன் மர்மம் என்ன ? பக்தியின் பெயரால் ஒரு சேலத்துத் தமிழ்க் குழந்தை சிறு பருவம் முதலே குறிப்பிட்ட மன நிலையில் வளர்க்கப்பட்டு சாமியாராக்கப்படுவதை இந்த சமூகம் கொண்டாடும் என்றால், தேசபக்தியின் பெயரால், ஒரு ஈழத்துத் தமிழ்க் குழந்தை சிறு பருவம் முதலே குறிப்பிட்ட மன நிலையில் வளர்க்கப்பட்டு துப்பாக்கி ஏந்திய சிப்பாயாவதை மட்டும் எப்படி கண்டிக்க இயலும் ? எப்படிப்பட்ட மூளைச்சலவைக்கும் குழந்தைகள் உட்படுத்தப்படுவதை கறாராகக் கண்டிக்கும் சமூகமே நேர்மையான சமூகமாக இருக்க முடியும்.

Vol.2 No.4, August 16-31, 2004 - Rs.4/-

தீக்கதிர்

ஆகஸ்ட் 16-31, 2004 விலை ரூ.4 ஆசிரியர் : ஞாநி

தூக்கு நியாயமா?



மரண தண்டனை எதற்காக ?

கொலைக் குற்றம் செய்தவர்களுக்கு மரண தண்டனை கொடுக்க வேண்டும் என்று சொல்லுபவர்கள் அதற்குச் சொல்லும் காரணம் அப்போதுதான் குற்றவாளிகள் இனி குற்றம் செய்யாமல் இருப்பார்கள். அந்த தண்டனையைப் பார்த்து மற்றவர்களும் அத்தகைய குற்றத்தில் ஈடுபடாமல் இருப்பார்கள் என்பதே அவர்களின் வாதம்.

இந்த வாதத்தை ஏற்றுக் கொள்ளும் இன்னும் சிலர் கொலைக்கு மட்டுமல்ல. பாலியல் வன்முறைக் குற்றத்துக்கும் மரண தண்டனை விதிக்கப்பட வேண்டும் என்கிறார்கள்.

குற்றம் செய்தவரைக் கொல்வதென்பது அந்தக் குற்றம் நிகழ்வதற்குக் காரணமாக இருந்த சமூக அமைப்பைக் காப்பாற்றுவதே ஆகும். அந்தக் குற்றம் நிகழத் தூண்டிய சமூகக் காரணங்களில் கவனம் செலுத்தாமல், குற்றவாளி என்ற தனி நபரைக் கொன்று விட்டால், அந்தக் குற்றமே சமூகத்திலிருந்து மறைந்து விடும் என்று நம்புவது அசட்டுத்தனமானது.

முன்னாள் உச்ச நீதிமன்ற நீதிபதி வி.ஆர்.கிருஷ்ணய்யர் கொலைக் குற்றவாளிகளை மூன்று விதமாக வகைப்படுத்துகிறார். ஒரு நொடியில் உணர்ச்சி வசப்பட்டு கொல்லுகிறவர்கள். இவர்கள் நிச்சயம் தூக்குக் கயிற்றைப் பற்றி முன்கூட்டி யோசிக்கக்கூடப் போவதில்லை. எனவே அந்த பயம் அவர்களை தடுக்காது.

இரண்டாவது வகையினர் இறுகிய மனமுடைய கிரிமினல்கள். இவர்களும் (சாவுக்கு) மரண தண்டனைக்கு பயப்படப் போவதில்லை. மூன்றாவது வகையினர் கொள்கை அடிப்படையிலோ, தங்களுடைய ஆழ்ந்த நம்பிக்கை அடிப்படையிலோ, அரசியல் அடிப்படையிலோ கொலையில் ஈடுபட்டவர்கள். இவர்களும் மரணத்துக்கு அஞ்சுவதில்லை. எனவே மரண தண்டனை அச்சத்தை ஏற்படுத்தி கொலைக் குற்றங்களைக் குறைக்கும் என்று நம்புவது அர்த்தமற்றது.

இதை இங்கிலாந்தில் ராயல் கமிஷன் 1866லேயே சுட்டிக் காட்டியது. அங்கு ஒரு நகரத்தில் மரண தண்டனைக் கைதிகளாக இருந்த 167 பேரில் 164 பேர் தங்கள் கண் முன்பாகவே வேறொருவர் தூக்கிலிடப்பட்டு தண்டிக்கப் பட்டதைப் பார்த்தவர்கள். ஆனால் அது ஒன்றும் அவர்கள் குற்றம் செய்வதைத் தடுத்து விடவில்லை. எனவே தூக்கு தண்டனையை ஒழித்து விடலாம் என்று ராயல் கமிஷன் தெரிவித்தது.

இதுவரை உலகில் மரண தண்டனை 72 நாடுகளில் ஒழிக்கப்பட்டு விட்டது. இன்னும் 23 நாடுகளில் கடந்த பத்தாண்டுகளாக யாருக்கும் மரண தண்டனை நிறைவேற்றப்படவில்லை. அதனால் எந்த பாதிப்பும் ஏற்பட்டு விடவில்லை. குற்றங்கள் அதிகரித்து விடவில்லை. மரண தண்டனை அமலில் உள்ள நாடுகளில், குற்றங்கள் குறைந்து விட்டதாகவும் எந்த புள்ளி விவரமும் இல்லை. மரண தண்டனைக்கும் குற்ற வளர்ச்சிக்கும் ஒரு தொடர்பும் இல்லை என்பதே ஆய்வுகள் தெரிவிக்கும் உண்மை.

அண்மையில் 1999ல் மட்டும் 1813 பேர் மரண தண்டனையில் கொல்லப்பட்டனர். இதில் 85 சதவிகிதம் நடந்தது ஐந்தே நாடுகளில்தான் -- சீனா, சவுதி அராபியா, காங்கோ, இரான், அமெரிக்கா. உலகின் வளர்ந்த நாடுகளிலே அமெரிக்கா ஒன்றுதான் இன்னும் மரண தண்டனையை விடாப்பிடியாக வைத்திருக்கிறது. ஐரோப்பா முழுவதும் மரண தண்டனை இல்லை.

கொலைக் குற்றம் செய்தவர் தண்டனைக் காலம் முடிந்து வெளியே வந்து விட்டால் மீண்டும் கொலைகள் செய்வார் என்று அஞ்சத்தக்க அளவு எந்த நிகழ்ச்சியும் இல்லை. வெளியே வந்தபின் திருந்தி வாழ்ந்தவர்கள் எண்ணிக்கையே அதிகம். அவர்களை திருந்த விடாமல் தடுக்கும் அமைப்புதான் பல சமயங்களில் பிரச்சினையாகும். வெளியே விட்டால் நிச்சயம் ஆபத்து என்று கருதத்தக்க அளவு கொடூரமானவர்கள் எண்ணிக்கை மிகக் குறைவு. அவர்கள் இயற்கையாக இறக்கும் வரை சிறை தண்டனை அனுபவிக்க வேண்டும் என்று வேண்டுமானால் அதிகபட்ச தண்டனையாக உத்தரவிடலாம்.

பல சமயங்களில் நிரபராதிகள் தூக்கிலிடப்பட்டது நடந்திருக்கிறது. ஆயிரம் குற்றவாளிகள் தப்பிக்கலாம் ஆனால் ஒரு நிரபராதி கூட தண்டிக்கப்பட்டுவிடக் கூடாது என்பது நீதியின் புனிதமான கொள்கை என்பதற்கெல்லாம் நடைமுறையில் மரியாதை கிடையாது. அமெரிக்காவில் ஜார்ஜ் பிரண்டன் என்பவர் மீதான கொலைக் குற்றத்துக்கு மறுக்க முடியாத சாட்சியம் இருப்பதாகச் சொல்லி அவருக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டது. சில மாதங்களுக்குப் பின்னர் அந்தக் கொலையை பிராண்டன் செய்யவில்லை என்றும் தானே செய்ததாக வேறொருவர் ஒப்புதல் வாக்குமூலம் தந்தார். விசாரணையில் பிராண்டன் நிரபராதி என்பது நிரூபிக்கப்பட்டது.

அரசியல் ரீதியில் நடைபெறும் கொலைகளில், ஒரு பெரும் கூட்டம் கிளர்ச்சியில் ஈடுபடும்போது ஏற்பட்ட சாவுகளுக்காக அந்தக் கூட்டத்தில் யாருக்கு மரண தண்டனை விதிப்பது? உண்மையில் ஒவ்வொரு தேசத்தின் ராணுவமும் சுயபாதுகாப்பு என்ற பெயரில் மறு தரப்பை கொலை செய்யும் நோக்கத்துடனேதான் போரில் ஈடுபடுகிறது. அதுவும் அரசியல்தான்.

இந்தியாவில் அரசியல் கொலைக்காக முதலில் மரண தண்டனை விதிக்கப்பட்டது காந்தியின் கொலையாளிகளுக்குத்தான். அதன் பிறகு தூக்கிலிடப்பட்டவர்கள் நக்சல் பாரிகள். நாகபூஷண் பட் நாயக், தியாகு போன்று ஒரு சில நக்சல் பாரிகள் மரண தண்டனை விதிக்கப்பட்டு அதிலிருந்து மீண்டிருந்தாலும் பல நக்சல்பாரிகள் தூக்கில் இடப்பட்டிருக்கிறார்கள்.

ஆந்திரப்பிரதேசத்தில் அடிலாபாத் மாவட்டத்தில், ஏப்ரல் 1970ல் சுமார் முன்னூறு கூலிகள் லச்சு பட்டேல் என்ற பண்ணையார் வீட்டுக்கு ஊர்வலமாக சென்றார்கள். கொத்தடிமைகளாகக் கூலிகளை நடத்தி வந்த பட்டேல் ஒரு கந்து வட்டிக்காரனும் கூட. கூட்டத்தினரால் பட்டேல் கொல்லப்பட்டபிறகு முப்பது பேர் கைது செய்யப்பட்டார்கள். அதில் கிஷ்ட்ட கவுடு என்ற விவசாயியும், பூமைய்யா என்ற கிராமத்து டெய்லரும் மட்டுமே கொலைக் குற்றவாளிகளாக தீர்ப்பளிக்கப்பட்டு மரண தண்டனை விதிக்கப்பட்டது.

குடியரசுத் தலைவர் அவர்களுடைய கருணை மனுவை நிராகரித்தார். ஆனால் அந்தத் தகவல் அவர்களுக்குத் தெரிவிக்கப் படவில்லை என்ற காரணத்தைக் காட்டி கடைசி நிமிடத்தில் தூக்குக்கு தடை வாங்கப் பட்டது. அதன் பிறகு உச்ச நீதி மன்றம் வரை வழக்கு சென்றது. அரசியல் கொலைகளையும் இதர கொலைகளையும் சமமாகக் கருதக் கூடாது என்று தாங்கள் கருதினாலும், சட்டத்தில் அதற்கு இடமில்லை என்றது உச்ச நீதி மன்றம்.

இருவருக்கும் மரண தண்டனையை ஆயுள் தண்டனையாக மாற்றக் கோரி மூன்று முன்னாள் உயர் நீதி மன்ற நீதிபதிகள், 180 உச்ச நீதி மன்ற வக்கீல்கள் கையெழுத்திட்ட மனு குடியரசுத் தலைவருக்குத் தரப்பட்டது. நாடாளுமன்ற உறுப்பினர்கள் 80 பேர் (இதில் பலர் காங்கிரஸ் காரர்கள்) தனியே இதே கருத்தில் ஒரு மனு அளித்தனர். கம்யூனிஸ்ட் கட்சியும் இயக்கம் நடத்தியது. ஆனால் இவை எதுவும் பயன் தரவில்லை. மரண தண்டனை அறிவிக்கப்பட்டு மூன்றாண்டு கழித்து

பக்கம் 2 ▶

ஆகஸ்ட் 11: சென்னை அயன்புரம் சாந்திநகரில் 150 குடிசைகள் தீயில் நாசம். காயமோ, மரணமோ எதுவும் இல்லை. எப்படி ? குடந்தை கொலைகளுக்கு மட்டும் கீற்றுக் கொட்டகைகளைப் பழிப்பது ஏன் ?

மனிதன் பதில்கள்

சதாம் • விஜயகாந்த் • ஒலிம்பிக்ஸ் • வதந்திகள் • ஆட்சிக் கலைப்பு • மாறன் ஸ்டாம்ப் • ஜெயலட்சுமி

சதாம் உசேனுக்காக சென்னை வழக்கறிஞர் பி.வி பக்தவத்சலம் வாதாடப் போகிறாராமே ?

ஆர்.ராமச்சந்திரன், கோவை-2

சதாமுக்காக இராக் நாட்டையும் பண்பாட்டையும் அரசியலையும் நன்கறிந்த இராக் வழக்கறிஞர்கள் வாதாடுவதே பொருத்தமானது. இங்கே பொடா சட்டத்தின் கீழ் கைதான நெடுமாறன், வைகோ, சுப.வீரபாண்டியன் போன்றோர் விடுதலையான பிறகும் கூட தர்மபுரி பகுதியில் கைது செய்யப்பட்ட நக்சலைட் பெண் கைதிகள் இன்னும் பொடாவின் கீழ் சிறையில் இருக்கிறார்கள். நக்சல்பாரி இயக்க ஆதரவாளரான பி.வி.பக்தவத்சலத்தின் நேரமும் உழைப்பும் அந்தப் பெண்களுக்கு முதலில் பயன்படட்டும்.

விஜய்காந்த்துக்கு பா.ஜ.க தார்மீக ஆதரவு அளிக்கும் என்று அதன் தலைவர் சி.பி ராதாகிருஷ்ணன் அறிவித்திருப்பது ஏன் ?

அன்பு கணேசன், புதுக்கோட்டை

தமிழ் நாட்டில் தி.மு.க, அ.தி.மு.க இரண்டுக்கும் மாற்றாக தன்னை அடுத்த பத்தாண்டுகளில் முன்னிறுத்திக் கொள்வதே பா.ஜ.கவின் திட்டம். அதைச் செய்ய தனியே தன்னால் முடியாது என்பது அதற்குத் தெரியும். முதல் கட்டமாக, ஜெயலலிதா, கருணாநிதி இருவரின் சுய நலப் போக்கை பயன்படுத்திக் கொண்டு அவர்கள் ஆதரவுடன் தமிழகம் முழுவதும் தன் கட்சியை அறிமுகம் செய்யும் முதல் கட்ட வேலையை செய்து முடித்து விட்டது. அடுத்த கட்டத்துக்கு ரஜினியை நம்பியிருந்தது. ரஜினி வாய்ஸ் எடுபடாது என்று தெரிந்தவுடன் இப்போது விஜய்காந்த்தைப் பயன்படுத்தப் பார்க்கிறது. பி.ஜே.பியை விஜய்காந்த் ஆதரித்தால் அதற்கு லாபம்தான். ஆனால் அவருக்கு பெரும் நஷ்டமாகிவிடும்.

ஒலிம்பிக்ஸ் மறுபடியும் கிரீசில் நடப்பது வரலாற்று சிறப்புதானே ?

எம்.கோவிந்தராஜ், கடலூர்

தொடங்கிய நாட்டிலேயே மறுபடியும் நடப்பது சிறப்புதான். ஆனால் அதை விட முக்கியம், கிரீசின் மொத்த மக்கள் தொகை ஒரு கோடி தான் என்பது. வெளி நாட்டில் வாழும் கிரேக்கர்கள் தொகை இன்னொரு 70 லட்சம். இரண்டு கோடியை விடக் குறைவான கிரேக்கர்கள் உலக அளவிலான விளையாட்டுத் திருவிழாவை வெற்றிகரமாக நடத்த முயற்சிக்கும்போது, 120 கோடி இந்தியர்கள் அல்லது ஆறு கோடி தமிழர்கள் என்னவெல்லாம் செய்ய முடியும் என்று நாம் யோசிக்க வேண்டும்.

பள்ளிகளில் ,அலுவலகங்களில் வெடிகுண்டு, தீ விபத்து என்று புரளிகளும் வதந்திகளும் அதிகம் வருவதை எப்படி சமாளிப்பது ?

ஆர்.எம்.குழந்தைவேலு திருவாரூர்

இப்படிப்பட்ட வதந்திகளை ஆரம்பித்து வைக்கிறவர்கள் நிச்சயம் கண்டு பிடிக்கப்பட்டு தண்டிக்கப்பட வேண்டும்தான். அது ஒன்றும் அவ்வளவு கடினமானதல்ல. இன்று எல்லா டெலிபோன்களிலும் அழைப்பவர் அடையாளம் தெரிவது எளிதாகிவிட்டது. அதே சமயம் மெத்தனமும் அலட்சியமும் நிறைந்த நமது சமூகத்தில் இந்த வதந்திகளினால், கொஞ்சம் சுறுசுறுப்பும் கவனமும் விழிப்பும் அதிகரித்திருப்பது ஆறுதலான லாபம்.

ஓட்டுப் பதிவு இயந்திரத்தில் தில்லு முல்லு செய்ய முடியும் என்று நிரூபிக்கும்படி ஜெயலலிதாவுக்கு தேர்தல் ஆணையம் சவால் விடுத்துள்ளது சரியா?

வி.குமரேசன், சைதாப்பேட்டை

ரொம்ப சரி. தன் குற்றச்சாட்டை நிரூபிக்க முதலமைச்சர் முன்வர வேண்டும். அவரால் நிரூபிக்க முடியாவிட்டாலும் கூட, மின்னணு இயந்திரம் பற்றி அவர் எழுப்பும் சந்தேகங்கள் எல்லாவற்றுக்கும் கிடைக்கக்கூடிய விளக்கங்கள் வாக்காளர்களுக்கு பயனுள்ளவை. இந்த ஓட்டுப்பதிவு முறை நேரத்தையும் பணத்தையும் மிச்சப்படுத்துகிறது என்பதால், இதை இன்னும் செழுமைப்படுத்த எந்த வாய்ப்பு கிடைத்தாலும் சரி. நல்லதுதான். திருடுபவர் இல்லாவிட்டால் பூட்டு கண்டுபிடிக்கப்பட்டிருக்காது அல்லவா.

இந்தியாவில் கருத்துச் சுதந்திரம் எந்த அளவு உள்ளது ?

எஸ்.ஜெயகாந்தன், புளியம்பட்டி

நிச்சயம் இன்னும் அதிகம் தேவைப்படுகிறது. அதே சமயம் மோசமான நிலை என்று சொல்ல முடியாது. கருத்துச் சுதந்திரத்துக்கு இங்கே முதல் எதிரி பணம். அதன் பிறகுதான் அதிகாரம்.

தற்போது தமிழ் சினிமாவில் பறை இசையுடன் பாடல்கள் வருகிறதே ? இதை தமிழர் இசைக்கு கிடைத்த வெற்றியாகக் கருதலாமா?

ஆர்.கே.மணிகண்டன், கோவை 41.

கருத முடியாது. ஐம்பது ஆண்டுகளுக்கு முந்தைய தமிழ் சினிமா இசையில் கூட பறை ஒலித்திருக்கிறது. தமிழ் சினிமாவின் அடிப்படையான வியாபார நோக்கங்கள், சீர் கேட்டு மதிப்பீடுகள் மாறாதவரைக்கும் அது எந்த முற்போக்கான விஷயத்தை பயன்படுத்தினாலும், அதுவும் வியாபாரத்துக்கே பயன்படும். ஸ்டூடியோ தொழிலாளர் வேலை நிறுத்தத்தை முறியடிக்க ஸ்டூடியோவை அரிசி கோடவுனாகவும் மாற்றுவார்கள். அடுத்த வருடமே தொழிலாளர் போராட்டத்தைப் போற்றி சிவப்புப் படமும் எடுப்பார்கள்.

அ.தி.மு.க ஆட்சியைக் கலைக்க தி.மு.க முயற்சி எடுத்து வருகிறதே ?

வி.கண்ணபிரான், திருவள்ளூர்

ஜெயலலிதாவுக்கு ஓட்டு சம்பாதித்துக் கொடுப்பதும் தி.மு.கதான். அதன் தவறுகளின் விளைவால்தான் இன்னமும் ஜெயலலிதாவுக்கு ஓட்டு கிடைக்கிறது. அ.தி.மு.க ஆட்சியை மக்கள் ஆதரவுடன் அடுத்த தேர்தலில் தோற்கடிக்க முயற்சிப்பது ஒன்றுதான் நியாயமானது. ஆனல் தி.மு.க தலைமைக்கு இப்போதே தமிழ் நாட்டில் ஆட்சியைப் பிடித்துவிட்ட மாதிரியான போதை ஏற்பட்டிருக்கிறது.. அதனால்தான் சென்னையில் நடக்கும் மத்திய அரசு விழாக்களுக்கு கருணாநிதியையும் அன்பழகனையும் முக்கிய பிரமுகர்களாக அழைத்து அற்ப சந்தோஷங்களில் திளைக்கிறார்கள்.

முரசொலி மாறனுக்கு தபால் தலை வெளியிடுவது முறையா ? அதற்கு ஏதேனும் தகுதி வரையறைகள் உண்டா ?

எல்.கேசவன் விழுப்புரம்

ஒரே தகுதி ஆட்சியும் அதிகாரமும் நம் கையில் இருக்க வேண்டும் என்பதுதான். இன்னும் சில வருடங்கள் பி.ஜே.பி ஆட்சியில் இருந்தால் கோட்சேவுக்குக் கூட தபால் தலை வெளியிட்டிருக்கும். அபூர்வ மிருகங்கள், பறவைகளுக்கெல்லாம் தபால் தலை வெளியிடும்போது மாறனுக்கும் இருந்துவிட்டுப் போகட்டுமே . திராவிட இயக்கத்தின் சாமன்யன் அரசியலிலிருந்து பரிணாம வளர்ச்சியில் சர்வ தேச முதலாளி ஆன சாதனையைக் குறிக்க வேண்டாமா?

ஜெயலட்சுமி விவகாரம் போலீஸ் துறையையே அதிர வைத்துவிட்டதாமே?

ஆர்.எஸ்.கிருஷ்ணமூர்த்தி , மதுரை 2

இதே மாதிரி பல அதிர்ச்சிகளைக் கண்டவர்கள். இதற்கெல்லாம் அயரமாட்டார்கள் என்று நம்பலாம். இந்த விஷயத்தில் புலனாய்வு இதழ்கள் செய்வதுதான் தவறாக இருக்கிறது. குற்றம் சாட்டப்பட்ட தெல்ஜியுடன் ஒரு மேடையில் ஜார்ஜ் பெர்ணாண்டஸ் இருந்தால் அந்தப் புகைப்படத்தில் ஜார்ஜ் முகத்தை கலைக்காமல் வெளியிடுகிற பத்திரிகைகள், ஏன் குற்றம் சாட்டப்பட்ட ஜெயலட்சுமியுடன் உயர் அதிகாரிகள் இருக்கும் படங்களில் அந்த அதிகாரிகள் முகத்தைக் கலைத்து வெளியிடுகின்றன ?

முன்பக்கத்தொடர்ச்சி

டிசம்பர் 1,1975 அன்று இருவரும் தூக்கிலிடப் பட்டனர். (நெருக்கடி பிரகடனம் அமலில் இருந்த காலம்.)

இப்படி தாமதப்படுத்துவதையே ஒரு காரணம் காட்டி மரண தண்டனையை ஆயுள் தண்டனையாக மாற்றக் கோரலாம் என்று ஒரு உச்ச நீதி மன்ற தீர்ப்பு சொல்லியிருக்கிறது. 1983ல் தமிழ் நாட்டின் விஷ ஊசி கொலைவழக்கில் தண்டிக்கப்பட்ட வைத்தியின் மனுவை விசாரித்த உச்ச நீதி மன்ற நீதிபதிகள் சின்னப்ப ரெட்டியும் ஆர்.பி.மிஸ்ராவும் அரசியல் சட்டத்தின் 21 வது பிரிவின் கீழ் குடிமக்களுக்கு உயிர் வாழ்வதற்கும் சுதந்திரத்துக்கும் உள்ள உரிமை, மரண தண்டனையை நிறைவேற்றத் தாமதம் செய்வதில் பாதிக்கப்படுகிறது என்று கூறினர். எனவே விதிக்கப்பட்டு இரண்டாண்டுகள் ஆகியும் மரண தண்டனையை நிறைவேற்றாவிட்டால், அந்த அடிப்படையில் அதை ஆயுள் தண்டனையாக மாற்றக் கோரி மனு செய்யலாம் என்று தீர்ப்பளித்தனர். இதன்படி ராஜீவ் கொலை வழக்கில் மரண தண்டனை விதிக்கப்பட்டவர்களும், கல்கத்தாவின் தனஞ்ஜயும் கூட ஆயுள் தண்டனைக்கு தகுதி யுடையவர்கள்தான்.

தமிழ் நாட்டில் ராஜீவ் கொலை வழக்கில் மரண தண்டனை விதிக்கப் பட்டவர்களுக்கு அந்தத் தண்டனை ஆயுள் தண்டனையாகக் குறைக்கப்பட வேண்டுமென்று (நியாயமாகவே) டெல்லி முதல் கன்யாகுமரி வரை இயக்கம் நடத்திய நெடுமாறன், சுப வீரபாண்டியன் போன்றோரின் குரல்களெல்லாம் தனஞ்ஜெய் போன்றவர்களுக்காக ஒலிப்பதில்லை. ஒலித்திருந்தால் நமது செவிகளுக்கு எட்டவில்லை.

உலகம் முழுவதும் மரண தண்டனையிலிருந்து தப்பிக்க முடியாமல் சிக்கிக் கொள்கிறவர்கள் பெரும்பாலும் அரசியல் பலமோ, பண பலமோ, அறிவுஜீவி பலமோ இல்லாத சமூகத்தின் அடித்தட்டு ஏழை மக்கள்தானென்பது பல ஆய்வுகளில் நிரூபிக்கப்பட்டிருக்கிறது. குற்றம் செய்த பெரும் பணக்காரர்களோ, நிலப்பிரபுக்களோ தண்டனை பெற்று அரசாங்கத்தால் தூக்கிலிடப்பட்டதாக வரலாறு இல்லை.

மரண தண்டனை என்பது ஒரு சமூகம் சட்டத்தின் கீழ் ஒளிந்து கொண்டு கொலை செய்வதைத் தவிர வேறல்ல.

அது போலவே போலீசுடன், ராணுவத்துடன் மோதல் என்ற பெயரில் (encounter) ஆயிரக்கணக்கானவர்கள் இந்தியாவில் சுட்டுக் கொல்லப்பட்டிருக்கிறார்கள். 1980லிருந்து 1984 வரை மட்டுமே இப்படிக் கொல்லப் பட்டவர்கள் எட்டாயிரம் பேர். இதில் பெரும்பாலானவை மோதல்களே அல்ல. கைது செய்யப்பட்ட நிராயுத பாணிகளை சுட்டுக் கொன்றதாகும். ஆனால் இது தொடர்பாக சிவில் உரிமை அமைப்புகள் போராடி, தவறு செய்த போலீசார் மீது வழக்குகள் பதிவு செய்யும் அளவுக்கு வந்தாலும், கொலைக் குற்றத்துக்காக இதுவரை அப்படிப்பட்ட காவலர்கள் யாரும் மரண தண்டனை விதிக்கப்பட்டு தூக்கிலிடப்பட்டதில்லை.

கடைசி நிமிடத்தில் சகோதரர் போட்ட மனு மீது உச்ச நீதி மன்றம் தந்த ஆகஸ்ட் 12 தீர்ப்பினால், இந்த இதழ் அச்சாகும்போது தனஞ்ஜெய்க்கு பிறந்த நாளே (ஆகஸ்ட் 14) இறந்த நாளாகிவிட்டிருக்கும்.

தூக்கை எதிர்பார்த்தபடியே (ஆயுள் தண்டனைக்காலமான) 14 ஆண்டுகளை சிறையில் கழித்த தனஞ்ஜெய் 1994ல் போட்ட அப்பீல் மனுவை விசாரிக்க அப்போது நீதி மன்றம் எட்டாண்டுகள் எடுத்திருக்கிறது. சிபு சோரன் மீதான வழக்கு 29 ஆண்டுகள் கழித்து உயிரூட்டப்படுகிறது. இந்த தேசத்தில் நீதிமன்றங்களில் இப்படி வழக்குகள் தாமதமாவதற்கு யாரைத் தூக்கில் போடுவது ?

மரண தண்டனை என்பது ஒரு சமூகம் சட்டத்தின் கீழ் ஒளிந்து கொண்டு கொலை செய்வதைத் தவிர வேறல்ல. எப்படி தனி நபரின் கொலை கடுமையாகக் கண்டிக்கத்தக்கதோ அதே போலத்தான் இதுவும். சிறைக்குள் கைதியையும், சிறைக்கு வெளியே சமூகத்தையும் சீர்திருத்துவது ஒன்றுதான் சரியான முறை.

புகழ் பெற்ற ரஷ்ய எழுத்தாளர் தாஸ்தாயெஸ்கி மரண தண்டனை விதிக்கப்பட்டவர். அவரைக் கொடூரமான ஜார் மன்னன் மன்னித்திருக்கா விட்டால், உலகம் சிறந்த எழுத்தாளரை இழந்திருக்கும்.

ஞாநி



குற்றமும் தண்டனையும்

எஸ்.வி.ராஜதுரை

பழிக்குப் பழி முற்போக்கா?

"...மக்களை ஒன்றுதிரட்டும் வகையில் தகவலை அளிக்கும் கருவியாகச் செயல்படும் ஊடகங்கள் வாயிலாக எப்படி ஒருவித வக்கிரமான நேரடி ஜனநாய்கம் தன்னைத்தானே நிலைநாட்டிக்கொள்கிறது என்பதைப் பார்க்கலாம். அவசரம், மக்கள் கும்பலின் ஆவேசம் (இது ஜனநாயகத் தன்மை கொண்டிருக்கவேண்டும் என்பதில்லை), கடும் நெருக்கடி ஆகியவற்றிலிருந்து எவ்வளவு தூரம் விலகி இருக்க வேண்டும் என்பதை அரசியல் களத்திற்கு ஓரளவு இருக்கும் சுயாதிகாரத்தின் நியதிகள்தான் பொதுவாகத் தீர்மானிக்கும். ஆனால், இப்படி விலகி நின்று செயல்படுவதை நேரடி ஜனநாயகம் இயலாததாக்கி விடுகிறது. நீதித்துறை, ஏன் அரசியலும்கூட, முழுவதுமாக எந்த நியாயத்தின் அடிப்படையில் நிறுவப்பட்டிருக்கிறதோ, அதற்கு நேர்மாறாக, பழிக்குப் பழி என்ற நியாயம் மீண்டும் நிலை நிறுத்தப்படுவதைப் பார்க்கிறோம். ஆக, இதழாளர்கள் யோசிப்பதற்குத் தேவையான இடைவெளியைக் காப்பதற்குப் பதிலாக, தாங்களே தீ வைக்கும் தீயணைப்புப்படையினர் போலச் செயல்படுவதும் நடக்கிறது."

–பியர் பூர்தியு (தொலைக்காட்சி: ஒரு கண்ணோட்டம், க்ரியா, சென்னை, 2004, ப.108)

மேற்கு வங்க இடதுசாரி முன்னணித் தலைமை – குறிப்பாக சி.பி.எம்.– தனது வைராக்கியம் நிறைவேறியுள்ளதாகப் 'பெருமை'ப் பட்டுகொள்ளலாம். மரண தண்டனை முறை ஒழிப்புக்காகப் போராடி வரும் மனித உரிமை ஆர்வலர்கள் மீது சி.பி.எம். பெருந் தலைவர்கள் கடந்த இரண்டு மாத காலமாகத் தொடுத்து வந்த தாக்குதல்களுக்கு வெற்றி கிடைத்துவிட்டது. மேற்கு வங்க சமுதாயத்தில் இனி குற்றங்கள் , அதுவும் கொலை, பாலியல் பலாத்காரம் ஆகியன , இனி ஒருபோதும் நடக்காதபடி நடவடிக்கை எடுத்துள்ள அந்த மாநிலத்தின் முதல்வருக்கு சீன மக்கள் (?) குடியரசிலிருந்து மட்டுமின்றி, சவூதி அரபியா, இராக், ஈரான், அமெரிக்கா ஆகியவற்றிலிருந்தும்கூட பாராட்டுச் செய்திகள் வரலாம். ஒரு இளம் பெண்ணைப் பாலியல் பலாத்காரம் செய்து கொன்று விட்டதாகக் குற்றம் சாட்டப்பட்டு மரண தண்டனை விதிக்கப்பட்ட தனஞ்சய் சாட்டர்ஜி என்ற முன்னாள் லிப்ட் ஆப்பரேட்டரின் கருணை மனு மீண்டும் ஒருமுறை குடியரசுத் தலைவரால் நிராகரிக்கப்பட்டு விட்டது. சாட்டர்ஜி சார்பில் இந்தியாவின் பல்வேறு பகுதிகளிருந்து மட்டுமின்றி உலகெங்குமிருந்தும் தலைசிறந்த மனிதர்கள் என்று கருதப்படத் தக்கோர் அனுப்பிய கருணை மனுக்களும் குப்பைக் கூடைக்கு அனுப்பப்பட்டு விட்டன. மத்திய அரசாங்கத்தின் மீது இடதுசாரிகள், குறிப்பாக சி.பி.எம்., செலுத்தும் செல்வாக்கைப் பற்றி இனி யாரும் சந்தேகப்படத் தேவையில்லை. மரண தண்டனை முறையை எப்போதும் வலுவாக ஆதரிக்கும் பழுத்த தேசியவாதிகளான வெங்கைய நாயுடு, அத்வானி போன்றோருக்கு வேண்டுமானால் தர்ம சங்கடம் ஏற்படலாம்.

ஒரு இளம் பெண்ணை பாலியல் பலாத்காரம் செய்து கொன்று வீட்டதாகக் குற்றம் சாட்டப்பட்டு மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ள தனஞ்சய் சாட்டர்ஜி என்ற முன்னாள் லி.ப்ட் ஆப்பரேட்டர் விவகாரத்தில் செய்தி, மின்னணு ஊடகங்கள் பல, மனித உரிமை அமைப்புகளின் நிலைப்பாட்டை இருட்டடிப்பு செய்வதிலும், திரித்துக் கூறுவதிலும் கொச்சைப்படுத்துவதிலும் மிகுந்த உற்சாகம் காட்டின. இந்த அமைப்புகளுக்கு தார்மீக உணர்வே இல்லை என்ற எண்ணத்தையும் ஏற்படுத்தின. மரண தண்டனையை நிறைவேற்றுவதற்காகக் கூலிக்கு அமர்த்தப்பட்டுள்ளவரிடம் கூட தார்மீகத் தீர்ப்புகளைக் கேட்டுப் பெற்றன. மனித உரிமையாளர்கள் மீது சி.பி.எம். தலைவர்கள் சிலர் தொடுத்து வந்த தாக்குதல்களும் இத்தகையனவே. விதிவிலக்காக இருப்பவர்களில் ஒருவர் அக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினரான பாசுதேவ் ஆச்சார்யா. மரண தண்டனை முறை ஒழித்துக் கட்டப்பட வேண்டும் என்பதே தனது கட்சியின் நிலைப்பாடு என்று அவர் கூறியுள்ளார். இது அவரது நிலைப்பாடாக இருக்கலாம், கட்சியின் முடிவல்ல என்பதை மேற்கு வங்க முதலமைச்சர் புத்ததேவ் பட்டாச்சார்யா தெளிவுபடுத்தியிருக்கிறார்.

தனஞ்சய் சாட்டர்ஜியை தூக்கிலிட்டே தீர வேண்டும் என்று அவரது குடும்பமே ஒரு பிரசாரத்தை தொடங்கிவைத்துள்ளது. இதன் பொருட்டு தங்களது கட்சியின் கடுமையான அரசியல் பகைவர்களான திரிணாமூல் காங்கிரசுடனும் நக்சலைட்டுகளுடனும் பொது மேடையைப் பகிர்ந்து கொண்டுள்ளது. முதல்வரின் துணைவியார் மீரா பட்டாச்சார்யா, "தனஞ்சய்க்குக் கருணை காட்டுமாறு சொல்வது எளிது. ஏனெனில் அப்படிச் சொல்பவர்கள் அந்த அவலமிக்க நிகழ்ச்சியால் பாதிக்கப் பட்டவர்கள் அல்லர்". இந்த தர்க்கத்தை விரிவுபடுத்தினால், வர்க்க சுரண்டலுக்கோ ஒடுக்குமுறைக்கோ ஒருபோதும் உள்ளாகியிருந்திராத ஜோதி பாசு, சோம்நாத் சட்டர்ஜி, புத்ததேவ் பட்டாச்சார்யா போன்றவர்கள் ஒருபோதும் மார்க்சியம் பேசக்கூடாது வர்க்கப் போராட்டம் பற்றி வாய்திறக்க கூடாது. முதல்வரின் மகள் சுசித்திரா, "பிற பாலியல் பலாத்காரவாதிகளுக்கு எச்சரிக்கையாக இருக்கும் பொருட்டு ஒரு முன்னுதாரணமாக தனஞ்சயின் தூக்கு தண்டனை அமைய வேண்டும்" என்று கூறியிருக்கிறார். "ஒரு அப்பாவிப் பெண்ணின் கழுத்தை நெறித்துக் கொன்ற ஒரு கயிறை விடவா தூக்குக் கயிறு கொடுரமானது? இத்தகைய மிருக செயலுக்குப் பிறகும் மனிதாபிமான காரணங்களையும் கருணை கோரிக்கைகளையும் பரிசீலிக்க முடியுமா?" என்றும் கேட்டிருக்கிறார்.

அமெரிக்காவின் முன்னாள் அரசுத் தலைமை வழக்குரைஞர் ராம்சே கிளார்க் கூறினார் "கொடுரமான குற்றமொன்று புரியப்பட்டுள்ள சூழ்நிலையில் வஞ்சம் தீர்க்க நமது உணர்ச்சிகள் துடிக்கின்றன. ஆனால் குற்றவாளியைக் கொல்வதால் ஏற்கனவே நடந்த குற்றத்தை இல்லாமல் செய்து விடமுடியாது என்பதையும், அவ்வாறு கொல்வதால் பிறர் அத்தகைய குற்றங்கள் புரிவதைக் தடுக்கமுடியாது என்பதையும், பழிக்குப் பழி வாங்கினாலும் பாதிக்கப்பட்டவர்களுக்கு இதனால் எந்த ஆதாயமும் இல்லை என்பதையும், கொலைக்குக் கொலை என்பது மானுட உயிரை அழித்து சமுதாயத்தை மேலும் இரக்கமற்றதாக்கும் என்பதையும் நாம் நன்கு அறிவோம். வன்முறையை இல்லாமல் செய்யவேண்டுமானால், உயிரை நாம் போற்றிப் பாதுகாக்க வேண்டும்."

ஒரு தாயாகவும் கோல்கத்தா குடிமகளாகவும் தான் பேசுவதாக கூறும் மீரா பட்டாச்சார்யா, " பாலியல் பலாத்காரம் செய்யப்பட்டு கொலை செய்யப்பட்ட பெண்ணின் பெற்றோர்கள் கடந்த 14 ஆண்டுகளாக அனுபவித்து வரும் வேதனையை நான் அறிவேன்" என்கிறார். ''மனிதத் தன்மையற்ற மிருகமான தனஞ்சயைக் கொன்றேயாக வேண்டும்" என இரண்டு வங்காள சினிமா நடிகைகளும் கூறியுள்ளனர். தனஞ்சயின் கொடுரச் செயலுக்குப் பலியான பெண்ணிற்கு மட்டுமின்றி, பாலியல் பலாத்காரத்திற்கோ பிற வகைக் கொடுரங்களுக்கும் வன்முறைக்கோ இலக்கான இலக்காகின்ற அனைத்துப் பெண்கள் மீதும் குறைந்த பட்சம் மீரா பட்டாச்சார்யாவுக்குள்ள அனுதாபமும் அக்கறையும் மனித உரிமை ஆர்வலர்களுக்கு உண்டு. பாலியல் பலாத்காரம் (Rape) என்பதற்கு இந்தியத் தண்டனைச் சட்டம் தரும் வரையறையும் விளக்கமும் மாற்றப்பட்டு வன்புணர்ச்சி அல்லாத வேறு சில செயல்களும் கூட அந்த வரையறையில் சேர்க்கப்பட வேண்டும் என்று அவர்களும் போராடி வருகிறார்கள். பாலியல் பலாத்காரத்திற்கும் கொலைக் குற்றத்திற்கும் ஆயுள் தண்டனை உள்ளிட்ட கடுந்தண்டனைகள் தரப்பட வேண்டும் என்றும் கூறுகின்றனர். ஆனால் எந்த ஒரு குற்றத்திற்கும் மரண தண்டனை வழங்கப்படுவதை அவர்கள் எதிர்ப்பதற்கான தார்மீக, சட்டவகைப்பட்ட வாதுரைகள் எதனையும் சி.பி.எம். தலைவர்கள் படித்ததாகத் தெரியவில்லை.

நேரடி சாட்சியங்கள் ஏதுமின்றி சந்தர்ப்ப சூழ்நிலைகளின் அடிப்படையிலேயே தனஞ்சய் தண்டிக்கப்பட்டிருக்கிறார், ஏழத்தாழ 14 ஆண்டுக்காலம் (ஆயுள் தண்டனைக் காலம்) தனிமைச் சிறையில் அடைக்கப்பட்டிருந்தார் என்பன ஒரு புறமிருக்க அவரைக் கொன்று விடுவதன் மூலம், இனி மேற்கு வங்கத்தில் பாலியல் பலாத்காரமோ, கொலைகளோ எதிர்காலத்தில் நடக்காது என்பதற்கான உத்திரவாதம் என்ன? தனஞ்சய் செய்தது இரு குற்றங்கள். ஒரு உயிரை மாய்த்தது ஒரு குற்றம். அதற்காகப் பழிக்குப்பழி வாங்குவதுதான் அவரது உயிரை மாய்த்தல். மனித உயிரை மதித்தல் என்ற பெயரால் இந்த முரண்பாடு உருவாக்கப்படுகிறது. மற்றொரு குற்றம் பாலியல் பலாத்காரம். இதை மட்டுமே தனஞ்சய் செய்திருந்தால்?.... "பாலியல் பலாத்காரத்திற்கு மரண தண்டனை வழங்கப்பட வேண்டும்'' என்று சிலர் கூறுவதை சி.பி.எம். ஆதரிக்குமா? அல்லது அதற்கு பழி வாங்குவது போல அதே கொடுரத்தை அவரது உடலில் செய்ய முடியுமா?

" இது ஒரு 'அரிதினும் அரிதான வழக்கு' எனவே இங்கு மரண தண்டனை வழங்கப்பட வேண்டும். '' என்று அகில இந்திய மாதர் சம்மேளனத்தின் பிரமுகர் பிருந்தா காரத் கூறியுள்ளார். 'அரிதினும் அரிதான' வழக்குகளில் மட்டுமே மரண தண்டனை வழங்கப்பட வேண்டும் என்று உச்சநீதிமன்றம் 1980 இல் கூறியது. இந்த விளக்கத்தை மனித உரிமை ஆர்வலர்கள் தொடர்ந்து எதிர்க்கக் காரணம், அது தனிப்பட்ட நீதிபதிகளின் தற்போக்கான, முற்றிலும் அகவயமான எண்ணங்களையும் விருப்ப அதிகாரத்தையும் சார்ந்ததாக இருப்பதுதான். ஒரு நீதிபதிக்கு 'அரிதினும் அரிதான' வழக்காக இருப்பது மற்றொரு நீதிபதிக்கு வேறுவிதமாக இருக்கலாம். ' அரிதினும் அரிதானது ' என்று தான் கருதிய கொலை வழக்கொன்றில் கோல்கத்தா நகர அமர்வு நீதிபதி, சில நாட்களுக்கு முன் குற்றம் சாட்டப்பட்டவர்களுக்கு ஆயுள் தண்டனை வழங்கியுள்ளார். 'பழிக்குப் பழி' யில் நம்பிக்கை வைத்துள்ள இடதுசாரி அரசாங்கம், இவர்களுக்கும் மரண தண்டனை வழங்குமாறு மேல்முறையீடு செய்யப்போகிறதாம்.

'பழிக்குப் பழி' என்பதற்கு ஆதரவாக சி.பி.எம்., மேற்கு வங்கத்தில் மக்கள் ஆதரவைத் திரட்டுகிறது. அவ்வப்போது மாறிக் கொண்டிருக்கும் பொது மக்கள் உணர்வுகளையும், உணர்ச்சிகளையும் விட உயரமான ஒரு தார்மீக தளத்தில் சட்டமும் நீதியும் செயல்பட வேண்டும் என்பதுதான் நாகரீக உலகம் ஏற்றுக் கொண்டுள்ள நெறி. இல்லையென்றால், இன்றோ அல்லது என்றோ நடந்த உண்மையான அல்லது கற்பிதம் செய்து கொள்ளப்பட்ட கொடுரச் செயல்களுக்கு அரசின் ஆதரவுடன் 'பொது மக்கள்' பழிவாங்கப் புறப்பட்டு, எண்ணற்ற பாலியல் பலாத்காரங்களையும் படுகொலைகளையும் செய்வ(த)தை விமர்சிக்கும் உரிமையை சி.பி.எம். இழந்து விட வேண்டும்.

காரல் மார்க்ஸ் கூறினார் "தன்னைப் பாதுகாத்துக் கொள்ளத் தூக்கிலேற்றுகிறவனைத் தவிர சிறந்த கருவி எதனையும் அறிந்திராத, உலகின் முன்னணி ஏட்டின் (The London Times) மூலம் தனது மூர்க்கத்தனத்தை என்றும் நிலைத்திருக்கும் சட்டம் எனப் பிரகடனம் செய்கிற ஒரு சமுதாயத்தின் மனப்பான்மையே மரண தண்டனை முறை. தனது நாகரிகத்தைப் போற்றிப் புகழ்ந்து கொண்டிருக்கும் சமுதாயத்தில் மரண தண்டனைக்கான நீதி நியாயத்தையோ அல்லது அதன் பொருத்தமுடைமையையோ அடிப்படையாகக் கொள்கிற எந்தவொரு கொள்கை நெறியையும் நிறுவுவது முற்றிலும் சாத்தியமற்றதாக இல்லாவிட்டாலும், மிகவும் கடினமானதாகவே இருக்கும்" ●

கவிதை

ம.தி.சாந்தன்

ஓடித் திரிந்து
பூச்சிகளைப் பிடிக்கிறது பல்லி

பறந்து பறந்து சோற்றுப் பருக்கைகளைப்
பொறுக்குகிறது காக்கை

முயற்சியை விடாமல் திரும்பவும்
இரத்தத்தை உறுஞ்சுகிறது கொசு

ஏதாவது கிடைக்குமாவென்று
பதுங்கிப் பதுங்கித் திரிகிறது பூனை

சங்கு ஊதியதும்
தொழிற் கூடங்களை நோக்கி
ஓடுகிறார்கள் மற்ற சிறைவாசிகள்

உழைப்பே உயர்வென்றும்
உழைப்பவர்க்கே உலகம் சொந்தமென்றும்
உழைக்காதவன் ஊசிப் போனவனென்றும்
எழுதிக் கொண்டிருக்கும் நான் மட்டும்
மரணதண்டனை பெற்ற பயங்கரவாதி
என்பதனால் பார்வையாளனாய் ...

ராஜீவ் கொலை வழக்கில் மரண தண்டனை விதிக்கப்பட்ட சாந்தனின் ஏராளமான சிறுகதைகளும் கவிதைகளும் தமிழ் பத்திரிகைகளில் வெளிவந்துள்ளன. தற்போது வேலூர் சிறையில் உள்ளார்

Vol.2 No.6, September 16-30, 2004 - Rs.4/-

தீக்கதிர்

செப்டம்பர் 16-30, 2004 விலை ரூ.4 ஆசிரியர் : ஞாநி

கம்யூனிஸ்டுகள் கவிழ்ப்பார்களா?

மன்மோகன் சிங்கின் நூறு நாள் ஆட்சியில் பாலும் தேனும் தெருக்களில் ஓடத் தொடங்கிவிட வில்லை. ஆனால் ரத்த ஆறு குஜராத் போல ஓடும் என்ற பயம் இல்லாமல் இருக்கிறது.

அதற்காக சங்கப் பரிவாரங்கள் செய்யும் முயற்சிகள் எல்லாம் தோற்றுப் போய்க் கொண்டும் இருக்கின்றன. ஹுப்ளியில் உமாபாரதியின் மூவண்ணக் கொடி ஊர்வல மிரட்டலோ, அலிபாகில் அப்சல்கான் சமாதியை தகர்க்க பத்தாயிரம் விஸ்வ ஹிந்து பரீஷத் சேனையினர் முயற்சியோ, வன்முறைக்கு இட்டுச் செல்லாமல் நிறுத்த மன்மோகன் அரசால் முடிந்திருக்கிறது.

தொடர்ந்து நாடாளுமன்றத்தில் பி.ஜே.பி கூச்சல் குழப்பம், வெளி நடப்பு, புறக்கணிப்பு என்று செய்த ரகளைகள் எதுவும் காங்கிரஸ் ஆட்சிக்கு எதிரான உணர்வை மக்களிடம் ஏற்படுத்தவில்லை. மாறாக பி.ஜே.பியின் அசல் முகம் இதில் அம்பலப்பட்டது. கறைபடிந்த அமைச்சர்கள் என்ற கூப்பாடும் பி.ஜே.பியின் கறைகளை நினைவுபடுத்தவே உதவி செய்தன.

மன்மோகன் சிங் ஆட்சியை சிகண்டி ஆட்சி என்று பி.ஜே.பி செய்த அவதூறுக்கு துளியும் ஆதரவில்லை. சோனியா காந்திதான் உண்மையான அதிகார சக்தி என்ற பிரசாரமும் எடுபடவில்லை. பிரதமராக தான் தெளிவான கருத்துக்களும் உறுதியான முடிவுகளும் எடுப்பதில் தயங்காதவர் என்பதை நாட்டுக்கு நிரூபிக்க மன்மோகன்சிங்கின் முதல் பத்திரிகையாளர் சந்திப்பு உதவியது.

அரசியல் பிரச்சினைகளை கட்சித் தலைவர் சோனியாவும், ஆட்சிப் பிரச்சினைகளை பிரதமர் மன்மோகனும் கவனித்துக் கொள்வது என்ற வேலைப் பங்கீடு மறுபடியும் கட்சி-ஆட்சி உறவில் கூட்டுத் தலைமைகளுக்கான வாய்ப்பை சிறிதளவேனும் வலுப்படுத்தியிருக்கிறது.

சமூகத்தில் பி.ஜே.பி ஆட்சிக் காலத்தில் விதைத்து வைக்கப்பட்ட விஷ வித்துக்களையெல்லாம் நூறே நாட்களில் களைவது முடியாதுதான். எனினும் அந்த திசை நோக்கி கல்வி அமைச்சர் அர்ஜுன் சிங்கின் முயற்சிகள் மெல்ல நகர்ந்தாலும் சரியாக நகர்வதாகவே தெரிகின்றன.

செய்திப் படங்களுக்குத் தணிக்கை விஷயத்திலும் பட விழாப் படங்களுக்கு இது வரை இல்லாத தணிக்கையைப் புகுத்துவதிலும் முந்தைய பி.ஜே.பி அரசின் விஷமங்களை வேகமாகக் களையும் போக்கு மன்மோகன் அரசிடம் இல்லை. இதில் அமைச்சர் ஜெயபால் ரெட்டியின் மெத்தனம் கவலை தருவதாகும்.

மன்மோகன் அரசின் மகிழ்ச்சிக்குரிய சாதனைகளாக தமிழகம் கருதத்தக்கவை பொடா ஒழிப்புக்கான முனைப்பும், தமிழை செம்மொழியாக அறிவிப்பதற்கான சம்மதமும்தான்.

வழுக்கல்கள், சறுக்கல்கள் என்று பார்த்தால் மன்மோகன் சிங்கின் ஆட்சியில் அதன் வட கிழக்குக் கொள்கையை சொல்லலாம். பஞ்சாப் நதி நீர் பிரச்சினையிலும், காவிரி பிரச்சினையிலும் இன்னமும் தன் பெயரைக் கெடுத்துக் கொள்ளும் நிலைக்கு அது செல்லவில்லை.

அதன் கூட்டணிக் கட்சியின் செயல்பாடே கவலை தருவது. டெல்லி ஆட்சி அதிகாரத்தை வைத்துக் கொண்டு தமிழகத்தில் போட்டி சர்க்கார் போல தோற்றம் தர தி.மு.க முயற்சிப்பதும், வியாபாரப் போட்டியாளர்களான ராஜ் டி.வி, விஜய் டி.வி ஆகியோரை நுட்பமாக ஒடுக்க அதிகாரத்தை சாமர்த்தியமாகப் பயன்படுத்திக் கொள்ளும் போக்கும் கவலைக்குரியன. இந்த விஷயத்தில் தி.மு.கவை விட பா.ம.க பக்குவமாகவும் சர்ச்சைகளில் சிக்காமலும் நடந்து வருவது கவனத்துக்குரியது.

சோனியாவுக்கு தமிழகத்தில் இருக்கும் அனுதாபத்தை, தி.மு.க தனக்கு சாதகமாகத் திருப்பிக் கொள்வதில் வெற்றி பெற்று வருகிறது. சோனியா இமேஜை தனக்கு பயன்படுத்திக் கொள்ளும் ஆற்றல், திறமை தமிழக காங்கிரசுக்கு இல்லாததும் இதற்கு வசதியாக அமைந்திருக்கிறது.

பி.ஜே.பி நம்பும் ஜோசியர்கள் எல்லாரும் செப்டம்பர் இறுதியில் மன்மோகன் சிங் ஆட்சிக்கு கிரக மாற்றத்தால் ஆபத்து என்பதை ஓயாமல் சொல்லி வருகிறார்கள். அதை பி.ஜே.பி நம்பினாலும், நடைமுறையில் நிறைவேற்றித்தர, அவர்கள் இப்போதைக்கு நம்பியிருப்பது கிரகங்களை விட கம்யூனிஸ்ட்டுகளைத்தான்.

பொருளாதாரக் கொள்கைப் பிரச்சினைகளில் கம்யூனிஸ்ட்டுகள் மன்மோகன் அரசைக் கவிழ்த்துவிடுவார்கள் என்று பி.ஜே.பி நப்பாசையுடன் இருக்கிறது.

வருங்கால வைப்பு நிதி வட்டிக் குறைப்பு, பொதுத்துறை நிறுவனங்களில் அன்னிய முதலீடு அதிகரிப்பு, திட்டக்கமிஷன் ஆலோசனைக் குழுக்களில் உலக வங்கிப் பிரதி நிதிகளுக்கு இடமளித்தது என்று பொருளாதாரக் கொள்கைப் பிரச்சினைகளில் தம் எதிர்ப்பை இடதுசாரிகள் பகிரங்கமாகவே தெரிவித்து வருகின்றனர்.

என்ன எதிர்ப்பு தெரிவித்தாலும் ஆட்சியைக் கவிழ்க்கக்கூடிய அளவுக்கு இடதுசாரிகள் செல்ல மாட்டார்கள் என்றே காங்கிரசும் பல இடதுசாரி ஆதரவாளர்களும் நம்புகிறார்கள். இதற்கு ஒரே காரணம் மன்மோகன் ஆட்சியைக் கவிழ்த்தால் பி.ஜே.பி மதவாத சக்தி மீண்டும் அதிகாரத்துக்கு வந்துவிடும் என்ற பயம் மட்டும்தான்.

எத்தனை நாட்களுக்கு இந்த பயம் மட்டுமே போதுமானது என்பதே கேள்வி.

பி.ஜே.பியைப் பொறுத்த மட்டில், மராட்டிய சட்டமன்ற தேர்தல் ஒரு முக்கியமான களம். தற்போது ஆட்சியில் இருக்கும் காங்கிரஸ்- பவார் கட்சிக் கூட்டணியை தேர்தலில் தோற்கடித்து விட்டால், பி.ஜே.பி மீண்டும் புத்துணர்ச்சி பெற்றுவிடும்.

மராட்டியத்தின் தலைநகரான மும்பை தான் இந்தியாவின் பொருளாதாரத் தலை நகரும் கூட. பங்கு மார்க்கெட்டை வைத்து சோனியா -மன்மோகன் ஆட்சியை முதல் வாரத்திலேயே பி.ஜே.பி சார்பு சக்திகள், தொழிலதிபர்கள் மிரட்டியதை மறந்துவிடக் கூடாது.

அது மட்டும் அல்ல. மத்தியில் காங்கிரசுக்கு தற்போது ஆதரவு காட்டும் உதிரிக்கட்சிகளுடனும் சில கூட்டணிக்கட்சிகளுடனும் பேரம் பேச மராட்டிய வெற்றி அதற்கு பலத்தைத் தந்து விடும்.

மராட்டியத்தில் காங்கிரஸ் ஆட்சியை இழந்தால், இடதுசாரிகள், மத்தியில் மூன்றாவது அணி பற்றி பேசத் தொடங்குவார்கள் என்று எதிர்பார்க்கலம். அத்தகைய ஒரு சூழலை எதிர் நோக்கி தேவ கவுடா முதல் முலாயம் சிங் யாதவ் வரை காத்திருக்கிறார்கள்.

எனவே மன்மோகன் சிங் ஆட்சியின் உடனடி எதிர்காலத்தை தீர்மானிக்கப் போகும் முக்கிய சக்தி இடதுசாரிகள் என்பதை விட வரப்போகும் மராட்டிய சட்ட மன்ற தேர்தல்தான் என்று சொல்லலாம்.

– ஞாநி

100 நாள் மன்மோகன் ஆட்சி



செப்டம்பர் 16 - ஓசோன் தினம் - புகைக்கும் வாகனங்களைக் குறைப்போம். 26 - காது கேளாதோர் தினம் - அவர் மொழியை நாம் கற்போம்.
27 : சுற்றுலா தினம் - குழந்தைகளைப் பாலியல் வன்முறை செய்யும் அந்நிய டூரிஸ்ட்டுகளை அனுமதியோம்.